[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 4

2. மற்ற உயர் அழுத்தத் தொழில்களைப் பொறுத்தவரையில் 2 எம். வி.ஏ. திறனுக்கு மேற்பட்ட மின் தேவையுள்ள தொழில்களுக்கு அவர்களது மின் உச்சத் தேவையில் 25 சதவிகிதம் மின் வெட்டு அமுல்படுத்தப்படும்.

3. மின்வெட்டு கணக்கிடுவதில் அத்தொழில்கள் 1981 டிசம்பர் வரையுள்ள ஒரு ஆண்டில் ஏதேனும் ஒரு மாதத்தில் உபயோகித்த உச்ச மின் தேவை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

4. மேற்குறிப்பிட்டுள்ள மின் உச்சத் தேவையில் விதிக்கப்பட்டுள்ள வெட்டு, ஊரகப்பகுதிகளில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட உயர் அழுத்தத் தொழில்களுக்குப் பொருந்தாது.

இதன்மூலம், மின் உச்சத் தேவை வெகுவாகக் குறைக்கப்பட்டு மின் நிறுத்தம் அறவே தவிர்க்கப்படும் என அரசு நம்புகிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் 3-வது பிரிவு, ஏப்ரல் மாத இறுதியில் மின் உற்பத்தியைத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் எண்ணூர் மின் நிலையத்தின் 5-வது பிரிவு பழுது பார்க்கப்பட்டு மின் உற்பத்தியை ஏப்ரல் மாதத்தில் துவங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இச்சமயத்தில் மேலே அமுல்படுத்தப்பட்டுள்ள மின் தேவை மீதான மின்வெட்டு மீண்டும் ஆய்வு செய்யப்படும்.

அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிற காரணத்தால் அவையின் அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

(6) கவன ஈர்ப்பு.

மதுராகோட்ஸ் ஆலை கழிவு நீர் தாமிரபரணி ஆற்றில் கலப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சோரணம், டி. மணி எம். செல்வமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

1982 மார்ச் 4]

(முற்பகல் 11.10)

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவர் அவர்களே, " அம்பா சமுத்திரம் தொகுதியிலுள்ள மதுரா கோட்ஸ் ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில் கலப்பதால் அப்பகுதி மக்கள் நோயால் பாதிக் கப்படுவது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மதுரா கோட்ஸ் ஆலைக் கழிவு நீரை தாமிரபரணி ஆற்றில் விடுவதால், அண்மையில் மீன்கள் இறந்து விடு கின்றன என்றோ அல்லது ஆற்று நீரைக் குடிப்பதால் நோய்கள் ஏற்படு வதாக ஒரு கூற்றோ புகாரோ வரவில்லை. திருநெல்வேலி மீன் துறை இயக் குநர் இத்தகைய புகார் ஏதும் வரவில்லை என தெரிவித்துள்ளார். மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் கழிவு நீர் ஆற்றில் கலப்பதால் தண்ணீர் கெடுவதாகப் புகார் இருந்து வருகிறது. இதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கழிவு நீரை தக்க முறையில் சுத்தம் செய்ய ' பையலாஜிக்கல் ' முறையை கடைப் பிடிக்குமாறு நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரா கோட்ஸ் நிறுவனம் தனது ஆலையின் கழிவுநீரை சுகாதார முறையில் ட்ரீட்மென்ட் செய்து வெளியேற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கும் வரை ஆலையின் லைசென்ஸை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மதுரா கோட்ஸ் நிறுவனம் நேஷனல் என்விரான்மென்டல் எஞ்சி னியரிங் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் என்ற அமைப்பினை தம்முடைய ஆலோசகராக நியமித்து அந்த அமைப்பின் பரிந்துரைகளை சுகாதாரத் துறைக்கு அளித்துள்ளது. மேலும் கழிவு நீர் ட்ரீட் செய்வது குறித்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். இந்நிறுவனம் அளித்துள்ள அறிக்கையில் இருந்த சில குறைபாடுகளைத் திருத்திக் கொள்ளுமாறு நம்முடைய துறை அவர்களுக்கு அறிவுரை கூறினார்கள். கழிவு நீர் ஆற்றில் கலப்பதால் ஆற்று நீர் கெடுவதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத் திருக்கிறார்கள். ஏற்கெனவே அந்த மில்லில் கழிவு நீரைச் சுத்தம் செய்வதற் காக 2, 3 பிளாண்ட்கள் வைத்திருக்கிறார்கள். அந்த பிளாண்டிலிருந்து வெளி

யேற்றுகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தத் தண்ணீர் தேங்குகிற இடத்தில் அவர்கள் மறைமுகமாக ஒரு வால்வு வைத்து அவ்வப் போது அதைப் பிடுங்கி விடுவதால் சுத்தம் செய்யப்படாமலேயே பெரும்பகுதி நாட்களிலே வந்துகொண்டிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற கற்களைப் பார்த்தாலே தெரியும், சாம்பல் போன்று பறக்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட மோசடியை அங்கே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில் கலக்க விடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப் பார்களா? தாமிரபரணியில் கலப்பதால் குடிநீர் எடுப்பவர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அப்படிப் பாதிக்கப்படாமலிருக்க அந்த ஆற்றிலே கலக்காமல் வேறு இடத்திலே கொண்டுபோய்விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அதற்காக ஒரு முறை இருக் கிறது. இத்தனை ஏக்கர் இடம் என்று ஒதுக்கி அந்த இடத்திற்குள்ளே நீரிலே இருக்கின்ற பையாலஜிக்கல் பொட்டன்சியைக் குறைத்து பிறகு ஆற்றிலே விடுவதுதான் பொருத்தமாக இருக்கும். உலகத்திலே எல்லா இடங்களிலும் இப்படித்தான் செய்யப்படுகிறது. இந்த நிறுவனம் அப்படிச் செய்யவில்லை என்பதால்தான் அவர்களுக்கு ஷோ காஸ் நோட்டிஸ் கொடுத்து கம்பெனியை நிறுத்தக்கூடிய நிலை ஏற்பட்டது. இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தவறு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS